மாணவியர்கள் வைப்பு நிதியாக வைப்பார்கள் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. ஆனால் அவர்களுக்கென்று ஒவ்வொரு பள்ளியிலேயும்--ஒவ்வொரு மாவட்டத்திலேயும் கணக்கு எடுக்கின்றபோது சிறந்த முறையிலே சேமிப்புத் திட்டத்தை ஊக்குவிக்கின்ற பள்ளிகளுக்கு மின்விசிறி தருதல் போன்ற பல்வேறு பரிசுகள் வழங்கப்படுகின்றன. மாணவர்களுக்கும் மாணவியர்களுக்கும் தனிப்பட்ட முறையில் பரிசுகள் வழங்கப்படுகின்றன. குலுக்கல் முறையில் பரிசுகள் வழங்கப்படுவது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 22, திரு. கு. சிவசுப்பிரமணியன், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

22—

வடலூரில் உரிமையியல் மற்றும் ஜுடிசியல் முதல்நிலை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள் அமைத்தல்

***26104**—திரு. கு. சிவசுப்பிரமணியன்:

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், வடலூரில் உரிமையியல் நீதிமன்றம் மற்றும் ஜுடிசியல் முதல்நிலை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், வடலூரில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைக்குமாறு கோரி வழக்கறிஞர்கள் சங்கம் மற்றும் வழக்காடும் பொது மக்களிடமிருந்து முறையீடுகள் எதுவும் பெறப்படவில்லை என்றும் அத்தகைய செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை எனவும் சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் நின்று தாங்கள்

1994 நவம்பர் 7]

சட்டமன்றத்தை நடத்திச் செல்கிற முறையில் இன்றைக்கு பெரிய விபத்திலிருந்து நீங்கள் மீண்டு வந்திருக்கிறீர்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்கு ஒன்றும் விபத்து இல்லை, அந்த இரயிலுக்கு விபத்து. அதிலே யாருக்கும் எந்தச் சேதமும் இல்லை.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: நம்முடைய இதய தெய்வம், நம்முடைய குல தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் யாருக்கும் எந்தத் தீங்கும் நேராது என்பதற்கு, இது எடுத்துக்காட்டாகும். ஆகவே இன்றைக்கு தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டத்தில், வடலூரிலே "ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" என்ற சுத்த சமரச சன்மார்க்க நெறி நின்று ஆன்மீக ஒருமைப்பாட்டை உலகத்திற்கு உணர்த்திய வள்ளலாருக்கு மாவட்டம் கண்ட நம்முடைய புரட்சித் தலைவிக்கு இந்த நல்ல நேரத்திலே என்னுடைய தலை வணங்கி, அவருடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். வடலூர் மையப் பகுதியாக உள்ளதாலும், வடலூரிலிருந்து கடலூருக்கு 36 கிலோ மீட்டர் சென்று வர வேண்டி உள்ளதாலும், விவசாயிகள், தொழிலாளர்கள், அந்தப் பகுதியிலே வசிக்கின்றவர்கள் சாதாரணமாக அற்ப வழக்குகளுக்குக்கூட அங்கு சென்று வர முடியாத சூழ்நிலையில், காலையில் சென்று நீதிமன்றத்திலே அழைக்கின்றபோது ஆஜராக முடியவில்லை என்பதால் பிடி ஆணைகள் அவ்வப்போது போடப்படுகின்றன. வழக்கறிஞர்கள் 317 சி. ஆர். பி.சி. படி அவ்வப்போது மனு தாக்கல் செய்ய வேண்டி உள்ளது. அங்கே முதுநிலை ஜே. எம். 1, ஜே. எம். 2, ஜே. எம். 3 என்று மூன்று நீதிமன்றங்களும், சீஃப் ஜுடீசியல் மேஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் ஒன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதிலே ஒரு நீதிமன்றத்தை, ஜே. எம். 3 என்ற நீதிமன்றத்தை வடலூரிலே அமைத்துத்தர நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலாவது முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இடத்திலே நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்றால் உயர்நீதிமன்றம் அங்கீகரிக்க வேண்டும். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வடலூரிலே இருக்கிற வழக்கறிஞர்கள், பொது மக்கள் ஆகியோரிடத்திலேயிருந்து மனுவைப் பெற்று, உயர்நீதிமன்றத்திற்கு அனுப்புவார்களேயானால், அவர்கள் அரசுக்கு அனுப்புவார்கள், அப்போது இது அனுதாபத்தோடு பரிசீலிக்கப்படும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 23, திரு. ப. கலியபெருமாள், இருக்கையில் இல்லை.

வினா எண் 24, திரு. வேலையா, இருக்கையில் இல்லை.

வினா எண் 25, டாக்டர் மு. காளிராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

25—

அவசர அறுவை சிகிச்சை நோயாளிகளுக்கு எய்ட்ஸ் நோய் பரிசோதனைக்குப்பின் இரத்தம் செலுத்துதல்.

***36520—டாக்டர் மு. காளிராஜன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவசர அறுவை சிகிச்சை நோயாளிகளுக்கு எய்ட்ஸ் நோய் பரிசோதனை செய்யாமல், இரத்தம் செலுத்துவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்த அரசு விதிகளைத் தளர்த்திக் கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பரிசோதனை செய்யாமல் ரத்தம் செலுத்துவதைத் தடுக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அரசு மருத்துவமனைகளில் ரத்தம் பரிசோதனை செய்ய Elisa Kit, Rapid Test Kit வழங்கப்பட்டு வருகிறது. தனியார் ரத்த வங்கிகளிலும் இதுபோன்ற பரிசோதனை செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு உள்ளது.

டாக்டர் மு. காளிராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு ரத்த வங்கிகளிலும், தனியார் ரத்த வங்கிகளிலும் எய்ட்ஸ் நோய் பரிசோதனை சரியான முறையில் செய்யப்படுகிறதா என்பதை அறிய ஒரு விழிப்புக்குழு அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.